தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 19, விசு- திருவள்ளுவர் ஆண்டு 2033

2002 ஏப்ரல் 2, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையின் பீடுடையது இல்."

உரிய கடமையைச் செய்வதில் சோர்வு காணாமல் முயற்சிகளை மேற்கொள்பவருடைய பெருமைக்கு மேலாக வேறொரு பெருமை கிடையாது.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா எண் 53, திருமதி நளினி மனோகரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.*

53—

கலைக் கல்லூரி

***405—திருமதி நளினி மனோகரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போளூர் தொகுதியில் கலைக் கல்லூரி தொடங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

போளூர் தொகுதியில் நடப்பாண்டில் புதிய அரசு கலைக் கல்லூரி தொடங்குவதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி நளினி மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. திருவண்ணாமலை மாவட்டத்தில் எனது போளூர் தொகுதி விவசாயப் பகுதி என்பதால் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. இதில் தொழிற்சாலை, கல்லூரி போன்றவைகள் இல்லை. போளூர் தனித் தாலுகாவாகவும், 4 ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடக்கியும் 500-க்கும் மேற்பட்ட கிராமங்களைக் கொண்டதாகவும் உள்ளது. இங்குள்ள மாணவ, மாணவியர்கள் தங்கள் மேல்நிலைப் படிப்பை வெற்றிகரமாக முடித்து மேற்கொண்டு கல்லூரிப் படிப்பைத் தொடர மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர். வருடந்தோறும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் தங்களின் கல்லூரிப் படிப்பிற்கு தினந்தோறும் 50 முதல் 100 கிலோ மீட்டர் வரை பேருந்திலும், இரயில்களிலும் சென்று வரும் நிலை நிலவி வருகிறது. இச்சிரமத்தால் எத்தனையோ மாணவ, மாணவியர்கள் தங்களின் கல்லூரிப் படிப்பைத் தொடரும் வாய்ப்பை இழந்துவிடுகின்றனர். அதனால் அவர்களின் எதிர்காலக் கனவுகளும், இலட்சியங்களும் சீரழிந்து விடுகின்றன. எனவே தன்னிகரற்ற மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் போளூர் பகுதியில் அரசு கலைக் கல்லூரி அல்லது விவசாயக் கல்லூரியை அடுத்த ஆண்டிலாவது தொடங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தன்னுடைய தொகுதியினுடைய வளர்ச்சிக்காக நல்ல கல்லூரி அமைய வேண்டும் என்ற ஆர்வத்துடன் கூறுகிறார். அவருடைய கருத்து மிகவும் ஏற்கக்கூடிய கருத்துதான். ஆனால், நம்முடைய நிதிநிலை பொருந்தாததன் காரணமாக அத்தகைய கல்லூரியை இப்போது ஆரம்பிக்கும் நிலை இல்லை. எதிர்காலத்தில் நிதிநிலை ஓரளவுக்கு உயர்ந்தால் அத்தகைய கல்லூரியை ஆரம்பிப்பதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 54, திரு. வே. கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.